***DEPOSITION OF WITNESS***

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,
PUDUKKOTTAI.
**OS.No. 04/2020**

**D.W.1 திரு.முத்துகிருஷ்ணன் த/பெ.செல்லையா நாள் – 13.07.2026**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை :–**

வாதியின் வங்கி அரசுடமையாக்கப்பட்ட வங்கி என்றால் சரிதான். வாதி வங்கியின் தற்போதைய மேலாளருக்கும், ஏற்கனவே இருந்த மேலாளருக்கும், எனக்கும் எவ்வித தனிப்பட்ட கருத்துவேறுபாடும் இல்லை என்றால் சரிதான். வாதி வங்கி தாக்கல் செய்துள்ள 4 கணக்கு பட்டியல்கள் வா.சா.ஆ.9, வா.சா.ஆ.29, வா.சா.ஆ.40, வா.சா.ஆ.51 ஆகியவைகள் குறித்து எனக்கு வழக்கு ஏதும் இல்லை என்றால் சரியல்ல. எனது எதிர் வழக்குரையில் மேற்படி கணக்கு விவரப்பட்டியல்களில் கொடுத்துள்ள கணக்கு விவரங்கள் எந்த வகையில் தவறானது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது எதிர்வழக்குரை, நிரூபண பிரமாணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்களை நான் தான் சொன்னேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.13, வா.சா.ஆ.18 முதல் வா.சா.ஆ.28, வா.சா.ஆ.30 முதல் வா.சா.ஆ.39, வா.சா.ஆ.41 முதல் வா.சா.ஆ.50 ஆவணங்களில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான் என்றால் கையொப்பங்கள் என்னுடையது தான், நெல்லை அடமானம் வைத்து தான் கடன் வாங்கினேன். அதற்கான ஆவணங்களில் தான் கையொப்பம் செய்தேன். வா.சா.ஆ.7, வா.சா.ஆ.23, வா.சா.ஆ.34, வா.சா.ஆ. 45 ஆகிய ஆவணங்கள் தொடர்பொறுப்பு கடிதங்களை எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் அவ்வாறு நான் எழுதவில்லை. நான் வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்துள்ள கொதுவை ஒப்பந்தங்களின்படி நான் அடமானம் வைத்த நெல் மூட்டைகளை நான் கடனை திருப்பி செலுத்தாதபட்சத்தில் ஏலம்விட உரிமை உள்ளது என்றால் சரியல்ல. நான் கடனை திருப்பி கட்டாததால் நான் ஒப்புக்கொண்டு தாக்கல் செய்துள்ள ஆவணங்களின்படி, எனக்கு முன்

அறிவிப்பு கொடுத்து முறையாக நாளிதழில் அறிவிப்பு செய்து ஏலம் விடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அவ்வாறு ஏலம்விடப்பட்டு வசூல் செய்யப்பட்ட தொகைகள் வாதி தாக்கல் செய்துள்ள கணக்கு விவரப்பட்டியலில் முறையாக வரவு வைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அவ்வாறு வரவு வைக்கப்பட்டு மீதமுள்ள தொகைக்கு தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல, முழு தொகைக்கும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். நான் சொல்வது தவறு என்றும், வாதி தாக்கல் செய்துள்ள கணக்கு விவரப்பட்டியல்களில் முறையாக கணக்கு வைக்கப்பட்டுள்ளது என்றும், நான் வாதி வங்கியிடம் வாங்கிய கடனை திருப்பி செலுத்தாமல் மோசடி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஏலத்தொகைகள் எனது வங்கி கணக்கில் முறையாக வரவு வைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Additional District Court,*
*Pudukkottai.*